(அ) தென்னாற்காடு மாவட்டம் பெண்ணாற்றிலிருந்து (திருக்கோவிலூர் அருகிலிருந்து) வேட்டவலத்திற்கு குடிநீர் கொண்டு செல்லுகின்ற திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) வேட்டவலம் செல்லும் வழியில் உள்ள கிராமங்களுக்கும் குடிதண்ணீர் கிடைக்க வழி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

(ஆ) ஆம்.

வேடசந்தூர் தாலுக்காவில் குட்டைகள் அமைக்கும் திட்டம்

* வினா எண் 453 திரு. வேடசந்தூர் ி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலூக்காவில் குட்டைகள் அமைக்க எந்தெந்த கிராமங்களில் ஆய்வு செய்யப்பட்டது?

(ஆ) எந்தெந்த கிராமங்களில் குட்டைகள் அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது

(இ) எப்போது பணி துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகது: (அ) வேடசந்தூர் வட்டத்தில் வி. புதுக்கோட்டை, குட்டம், வசைநாயக்கன்பட்டி வெள்ளேடு, மூலக்கவுண்டனூர் பாளையம், கன்னிமார்பாளையம் பாகநத்தம், உல்லியக்கோட்டை ஆகிய 9 கிராமங்களில் குட்டைகள் அமைக்க ஆய்வு செய்யப்பட்டது.

(ஆ) மற்றும் (இ) பாளையம் மற்றும் பாகநத்தம் ஆகிய இரண்டு கிராமங்களில் மட்டும் குட்டை அமைக்கும் திட்டங்கள் 1981-ம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன.

(முற்பகல் 9·40)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே: இந்தக் குட்டைகளை அமைப்பதைப் பொறுத்தவரையிலே அதனுடைய பயன் விகிதத்தைப் பார்த்து அதனை அமைப்பதைக் கைவிட்டுவிடுகிறார்கள். ஆக்வே இப்படிப்பட்ட குட்டைகளை அமைப்பதைப் பொறுத்தவரையிலே வறட்சி மிகுதியான பகுதிகளிலே அந்தப் பயன் விகிதத்திலிருந்து விதிவிலக்களித்து அமைத்துக் கொடுப்பதற்குரிய வகையிலே அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, பொதுவாகப் பின்தங்கிய பகுதிகளில் பெனிபிட் காஸ்ட் ரேஷியோ அதிகமாகப் பார்க்கவேண்டாம் என்று அரசு வற்புறுத்தி இருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான் கட

1982 மார்ச் 17]

வறட்சி நிவாரணப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலே ஒரு டன் உற்பத்திக்கு 13,000 ரூபாய் வரையில் கூட செலவழித்து குட்டை போன்றவைகளை ஏற்படுத்தலாம் என்று தமிழக அரசு முடிவு செய்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஊருணி, குட்டைகள் அமைப்பதிலே சில நடைமுறைக் காரணங்கள் இருப்பதால் அரசு அதுபற்றி தனியாக யோசித்துக்கொண்டிருக்கின்றது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, அரசு அமைக்கின்ற குளங்களைப் பொறுத்தவரையிலே விவசாயிகள் அந்தத் தண்ணீரை குறுகிய காலத்திலே பயன்படுத்தி விடுவதால் அது வீணாகிவிடுகின்றது. ஆகவே அந்தந்தப் பகுதிகளிலே நிலத்தடி நீரைப் பெருக்குகின்ற வகையிலே வருகின்ற தண்ணீரை உடனேயே எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற வகையிலே குளங்களின் மதகுகளை அடைத்து நீரைத் தேக்கி நிலத்தடி நீரினைப் பெருக்குவது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, இந்த ஊருணி, குட்டை அமைப்பதன் நோக்கமே அதுதான். அருகிலே உள்ள நிலத்தடி நீர் வளத்தை அதிகப்படுத்தி மற்ற காலங்களிலே கூட அங்கே விவசாயம் செய்ய வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுப்பதுதான் நோக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினை அரசு செயல்படுத்தி வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, இதுபோன்ற பர்கோலேஷன் பான்ட்ஸ் திட்டத்தை அரசு ஆர்வமாகச் செய்து வந்தாலும் கூட இதை எந்தத் துறையிலே செய்வது என்ற கேள்வி எழுந்து பொதுப்பணித் துறை செய்யவேண்டுமா அல்லது வேளாண்மைத்துறை செய்யவேண்டுமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டு இப்போது அந்தத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன், ஆகவே அந்தத் தடையை நீக்கி ஏதாவது ஒரு துறையின் மூலமாக இந்தத் திட்டத்தினைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, 1978-79—ஆம் ஆண்டு குட்டைகள் அமைக்கும் திட்டத்திற்கு சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின்கீழ் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த ஒப்புதல் நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டது. பிறகு திரும்பவும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று சிறுபாசனத் துறை தலைமைப் பொறியாளரிடம் நாம் கேட்டிருந்தோம். அவர்களும் சில திட்டங்களை முன்னோடியாக ஆய்வு செய்து அறிக்கையை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். இதற்கிடையே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவது போல் நீர் நிர்வாக ஆணையாளர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே இந்த குட்டை அமைக்கும் திட்டங்களைச் சிறுபாசனத் திட்டங்களாக மேற்கொள்ளக்கூடாது என்றும்

மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாக இவைகளை வேளாண்மைத் துறையோ அல்லது வசதிப் பணியாகக் கருதி உள்ளாட்சித் துறையோ மேற்கொள்ளவேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே வேளாண்மைத் துறை இதனை நடத்தவேண்டுமா அல்லது உள்ளாட்சித் துறையிடம் கொடுக்கப்பட வேண்டுமா அல்லது பொதுப்பணித்துறையே தொடர்ந்து செய்யலாமா என்ற அந்தக் கருத்தின் மீது அரசு இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்பத்தூர் ஏரி.

*வினா எண் 454 திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அம்பத்தூர் பகுதியில் அமைந்துள்ள ஏரி நீர்ப்பாசனத்திற்கு பயன்படாததால் இதனை வேறு கிட்டங்களுக்கு பயன்படுத்தும் நோக்கம் உள்ளதா?

(ஆ) மழைகாலங்களில் சோழபுரம், சத்தியபுரம் போன்ற பகுதிக்குள் ஏரியின் தண்ணீர் புகுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) அம்பத்தூர் ஏரி, அதன் கீழுள்ள நிலங்களின் பாசனத்திற்குப் பயன்படுவதால் வேறு வகையில் ஏரியைப் பயன்படுத்த தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) அம்பத்தூர் ஏரியின், வெள்ளக் காலத்தில் வரும் உபரி நீரை, மொகப்பையர் ஏரியின் வழியாக, கூவம் ஆற்றிற்கு திருப்புவதற்கான திட்டம், ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் நிறைவேற்றிய பின் சோழபுரம், சத்தியபுரம் போன்ற பகுதிகளில் மழைக் காலங்களில் நீர் புகுவது தடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் பகுதி ஒரு காலத்திலே பயிர் செய்கிற நிலமாக இருந்த பகுதி. இன்றைக்குத் தொழிற்பேட்டைகளாக மலர்ந்து, மிச்சம் மீதியிருக்கிற விளைநிலங்களும் வீட்டு வசதி வாரியத்தினால். நில அர்ஜிதம் செய்யப்படுகிறது. அப்படி இருக்கிறபோது, இந்த ஏரி நீர்ப்பாசனத்திற்கு அதிகமாக பயன்படுத்த முடியாத நிலை உருவாக்கப்படுகிறது. எனவே, இந்த ஏரியை நிரந்தரமாக, குடிதண்ணீர் உபயோகத்திற்காகவோ அல்லது ஏதாவதொரு தொழிற்பேட்டைக்காகவோ பயன்படுத்துகிற அளவுக்கு அரசு ஆலோசனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?